பக்கங்கள் 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆவணி26 புதன்கிழமை 11.09.2024 | கதிர் 308

# "அவர்கள் அச்சப்படுகிறார்கள்"

## தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுர தெரிவிப்பு

**ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படும்போது தேசிய மக்கள் சக்தியின் மூன்று சதவீதமான வாக்குகள் 51 சதவீதத்துக்கு மேற்பட்டு வெற்றி சாத்தியமா என்று கேள்வி எழுப்பினார்கள். ஆனால் தற்போது தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றால் அவ்வாறு நடக்கும். இவ்வாறு நடக்கும் என்று எதிர்வு கூற ஆரம்பித்து விட்டார்கள். அவாகள் அச்சப்படுகின்றார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.** 8



## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் 6 பேர் குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் தொடங்கியபோது, சஜித்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முடிவு குறித்த சர்ச்சைகள் இருக்கும் என்று பார்த்தால், அது வேறு விதமாக நகர்ந்திருப்பது தெரியவந்திருக்கிறது. உள்ளுக்குளேயே நடக்கும் குத்துவெட்டுக்கள் பல இந்தக் கூட்டத்தில் பகிரங்கமாக வெளிவந்துள்ளன. அதிலும் முக்கியமாக மாவை சேனாதிராசாவை ரணில் விக்கிரமசிங்க அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்தபோது அதன் பின்னணி வேறுவிதமாக அமைந்திருந்தது இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. கூட்டத்தில் பேசப்பட்ட இந்த 8

## பதவி வெறிதாக்கல் அறிவிப்பை 5 நாள்களுக்குள் தரவேண்டும்

### பொதுச்சேவை ஆணைக்குழு அறிவுறுத்து

பொதுச் சேவை ஆணைக்குழு, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அரச ஊழியர்கள் முன்னறிவிப்பின்றி 5 நாட்களுக்கு மேல் பணிக்கு சமூகமளிக்காவிட்டால், அந்த 5 நாட்களுக்குப் பிறகு முதல் 5 நாட்களுக்குள் சேவையை விட்டு வெளியேறுவதற்கான பதவி வெறிதாக்கல் அறிவிப்பை வெளியிட வேண்டும் என பொது சேவைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. 2

## எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து சிலிண்டருக்கு வாக்களியுங்கள்

### இல்லையேல் விவசாயமும் இருக்காது என்கிறார் ரணில்

எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். அதனை செய்யாவிட்டால சிலிண்டரும் இருக்காது விவசாயமும் இருக்காது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

வவுனியா, மதவச்சியில் 2

## மேலும் 5 இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியால் உடனடி பதவிநீக்கம்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 5 இராஜாங்க அமைச்சர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா சமன்மலீ குமாரசிங்க, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ. சானக ஆகியோர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 47(3) (அ) பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இவர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளும்தரப்புக்கு ஆதரவு வழங்காத 4 இராஜாங்க அமைச்சர்கள் ஏற்கனவே கடந்த வாரம் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

தற்போது மேலும் 5 பேர் நீக்கப்பட்டுள்ளனர். இந்த 5 பேரில் கீதா சமன்மலீ ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

## மில்கோ பால்மா விலை குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மில்கோ பால் மாவின் விலையை குறைக்கவுள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 1 கிலோ பால் மா பொதி ஒன்றின் விலை 190 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலைக்கு 2,585 ஷரூபாவாகும். 2

## அரசமைப்பு திருத்தம் குறித்து வாக்குறுதி எதுவும் தரமுடியாது

### நாமல் ராஜபக்ச இறுமாப்பு

ஏனைய வேட்பாளர்களைப் போன்று அரசமைப்பு திருத்தங்கள் தொடர்பில் அரசியல் வாக்குறுதிகளை வழங்க முடியாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர் சமூகத்திற்கு ஒரு நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தை உருவாக்க உறுதியளிக்கிறேன். நாட்டின் பிரகாசமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப என்னுடன் இணைந்து கொள்ளுமாறு இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். 2

## நாட்டைவிட்டு தப்பியோட 80 எம்.பிக்கள் தயாராம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் 80 முக்கிய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பேச்சாளர்களாக செயற்பட்ட அமைச்சர்கள் மற்றும் முக்கிய நபர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராக உள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவின் உண்மைத் தன்மையை அவர்கள் உணர்ந்துள்ளனர் என்று 2

### எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மீது பொலிஸார் தாக்குதல்

## பல்கலை மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் மதுஷான் கைது

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோதே அவர் கைது செய்யப்பட்டார்.

தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்று கோசங்களை எழுப்பியவாறு நகர்ந்து செல்வதற்கு முயன்றனர். எனினும் இவர்கள் ரயில் நிலையத்திலிருந்து ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் நோக்கி நகரவிடாது தடுக்கப்பட்டனர்.

இதன்போது பொலிஸார் மாணவர்கள் மீது தடியடி நடத்தியதுடன் 2

## கட்சி தாவியோரால் ஆபத்து ஏதுமில்லை

### இப்படிச் சொல்கிறார் ரிஷாத்

மக்களின் ஆணையை மீறி, கட்சியின் கட்டுக்கோப்பை உடைத்துக்கொண்டு, வேறு கட்சிகளில் இணைந்தோரால் எந்தப் பாதிப்பும் ஏற்படாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரும், முன்னாள் தவிசாளர் ஒருவரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராகவும் நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராகவுமே எமது கட்சி, மக்களின் ஆணையைக் கோரியது. இதனால் சஜித் பிரேமதாசவுக்கு கணிசமான வாக்குகளை எமது கட்சி பெற்றுக்கொடுத்தது.

நாடாளுமன்றத்தில் 4 உறுப்பினர்களைப் பெறுமளவுக்கு எமது கட்சிக்கு மக்களின் ஆணை கிடைத்தது. இந்த ஆணையை மீறி, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். இவர்களைப்பின்தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி மாறிவிட்டனர்.

மக்களின் ஆணைகளை மீறிய இவர்களை மன்னிக்கவே முடியாது. எதிர்வரும் காலங்களில் இவர்களை மீண்டும் எம்முடன் இணைக்கப் போவதில்லை. இவர்கள் சென்றதால் கட்சியின் வளர்ச்சியில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறுவோம். அந்தளவுக்கு மக்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது.

கோட்டாவின் சகாக்களைப் பாதுகாக்கவே இவர்கள் ரணிலுடன் இணைந்துள்ளனர்.

கடந்தகால ஊழல்வாதிகளும் அமைச்சர்களும் தங்களைப் பாதுகாப்பதற்கே, 2

## புலித்தோல் போர்த்திய ஆடுகள் ஜேவிபியினர்

### முன்னாள் அமைச்சர் ஹரிசன் தாக்கு

ஜேவிபியினர் புலித்தோல் போர்த்திய ஆடுகள். மற்றைய கட்சியினரை அச்சுறுத்துகின்றனர் என்று முன்னாள் அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

வவுனியா, மதவச்சியில் நேற்று நடைபெற்ற 'ரணிலால் இயலும்' பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மற்றைய கட்சியினரின் வீடுகளுக்கு தீ மூட்டவே ஜேவிபி இப்போது கிராமங்களுக்கு அதிகாரம் வழங்குவதாக கூறுகிறது.

முழுநாடும்துன்பத்திலிருந்த வேளையில் சஜித் பிரேமதாச எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில் கைவைக்க மாட்டேன் என்று சொன்னார். அனுரகுமாரவும் ஜேவிபி வன்முறைகளுக்கு தலைமைத்துவம் வழங்கியதை மறைத்துவிட்டார். ஆனால் மக்கள் இவர்கள் செய்ததை மறக்கவில்லை. எனவே இவர்களுக்கு தலைமைத்துவம் வழங்கி மீண்டும் வரிசைகளில் நிற்கவேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஜேவிபியே இந்த நாட்டின 8

## இறக்குமதிப் பண்டங்களின் வரிகளைத் திருத்த அனுமதி

பண்டங்கள் இறக்குமதியின் போது அறவிடப்படும் இறக்குமதி வரியைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பண்டங்கள் இறக்குமதி செய்யும் போது அறவிடப்படும் வரிவகைகளாவன, சுங்க இறக்குமதி வரி, செஸ் வரி, விசேட பண்டங்களுக்கான வரி மற்றும் துறைமுகங்கள் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிகளைத் திருத்தவேண்டிய கொள்கை ரீதியான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

விசேட பண்டங்கள் வரிக்கிணங்க ஒருசில இறக்குமதிப் பண்டங்களைக் குறித்த வரியிலிருந்து விடுவித்து சுங்க இறக்குமதி வரி உள்ளிட்ட பொதுவான இறக்குமதி வரிக் கட்டமைப்பில் உட்சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயங்கள் அறியவந்ததும் என்னுடைய சில தகவல் வட்டாரங்களை நோண்டினேன். முதலில் தகவல் தரத் தயங்கினாலும் தமிழ் அரசுக் கட்சிக் கூட்டத்திலேயே தகவல் அலசப்பட்டது தெரிந்ததும் உண்மை என்ன என்பதை அவர்கள் கக்கினர்.

ரணில் மாவை வீட்டிற்குச் சென்றது- தனியே மாவையைச் சந்திப்பதற்கு அல்ல. அந்தக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனும் சார்ள்ஸ் நிர்மலநாதனும் வருவதாக இருந்தது. அவர்கள் அதற்கு வாக்குறுதியளித்திருந்தார்கள். ஆனால் இறுதி நேரத்தில் இருவரும் மாவை வீட்டில் இருக்கவில்லை. இதனால் அவர்களைத் தொடர்புகொள்ள மாவையின் மகன் கலையமுதன் பல தடவைகள் முயன்றுள்ளார். பதில் கிடைக்காத நிலையில், மாவையே தனது அலைபேசியில் இருந்து அழைத்துள்ளார்.

மாவையின் அழைப்பை நிராகரிக்க முடியாத சிறீதரன் அவருக்குப் பதிலளித்துள்ளார். தனக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார் என்று தெரிவித்த மாவையர், அவர் சிறீதரனிடம் சில விடயங்கள் குறித்துக் கேள்விகேட்க விரும்புகின்றார் என்று கூறிவிட்டு அலைபேசியை ஸ்பீக்கரில் போட்டுள்ளார். மறுபுறத்தில் சிறீதரன் தமிழில் பேசியவைகளை மாவையர் ரணிலுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறியுள்ளார். பல நிமிட நேரம் நீடித்த இந்த உரையாடலை வரிக்குவரி பெறமுடியவில்லை. என்றாலும் அதன் சாராம்சம், பொது வேட்பாளருக்கு ஆதரவு என்று சிறீதரன் கூறித் திரிவது குறித்து ரணில் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு, வடக்கு கிழக்கில் தனது அரசியலுக்கு அது அவசியமானது என்றும் என்றாலும் தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு என்றும் சிறீதரன் தெரிவித்திருக்கிறார். அப்படியனால் சார்ள்ஸ் நிர்மலநாதனின் நிலைப்பாடு என்ன என்று ரணில் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு அவரும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றார் என்று பதிலளிக்கப்பட்டிருக்கின்றது. அலைபேசியை அணைத்துவிட்டு இப்போது உங்களுக்கு மகிழ்ச்சிதானே என்று மாவையர் ரணிலைப் பார்த்துக் கேட்டிருக்கின்றார்.

இப்போது கட்சிக் கூட்டத்தில் நடந்த விடயத்திற்கு வருவோம். கூட்டத்திற்கு சிறீதரன் வந்ததுமே மாவையர் வீட்டிலிருந்து ரணில் அவருடன் பேசிய விடயம் குறித்து சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். அந்த நேரத்தில் கூட்டத்திற்கு மாவையர் வந்திருக்கவில்லை. ரணிலைச் சந்திக்க வருமாறு மாவையர்தான் அழைத்தார். அதனால்தான் வந்தேன், அருகில் வந்த பின்னர் அது சரியானது அல்ல என்று பட்டதால் மாவையர் வீட்டிற்குச் செல்லவில்லை என்று சிறீதரன் பதிலளித்துள்ளார். அதன் பின்னர் கலையமுதன் பல தடவைகள் அழைப்பெடுத்தது குறித்தும், மாவையர் தொலைபேசியில் ரணிலுடன் தன்னைப் பேச வைத்தது குறித்தும் அவர் கூறியிருக்கின்றார். ஆனால் என்ன விடயம் பேசப்பட்டது என்கிற விடயத்தைத் தெரிவிக்கவில்லை. இந்த உரையாடல் அங்கிருந்த மற்றவர்களைப் பெரிதும் ஆச்சரியப்படுத்தியிருந்தது.

கட்சிக்குத் தெரியாமல், கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த முடிவுக்கு மாறாக உள்ளே வேறொரு ஓட்டம் ஓடப்படுகின்றது என்பது அப்போதுதான் அவர்களுக்குத் தெளிவானது. கூட்டத்திற்கு வந்திருந்த மாவையருக்கும் இந்த விடயம் தெரியவந்ததும் அவரும் தர்மசங்கடங்களுக்கு உள்ளாகியுள்ளார். விடயத்தைச் சமாளித்து சஜித்திற்கு ஆதரவளித்த விடயங்கள் தொடர்பாக உரையாடல் திசை திருப்பப்பட்டுள்ளது. சஜித்தை ஆதரிப்பதாக மத்திய செயற்குழு எடுத்த முடிவு முடிவுதான் என்பதை அங்கிருந்த எல்லோரும் ஏற்றுக்கொண்ட அதேவேளை, சஜித் தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள விடயங்கள் தொடர்பில் அவரிடமிருந்த கட்சிக்குத் தனியான உறுதிமொழிகள் பெறப்படவேண்டும் என்றும் அது தொடர்பில் சஜித்துடன் ஒப்பந்தம் செய்யப்படவேண்டும் என்றும் (இது என்ன டிசைன் என்றே தெரியவில்லை, தேர்தல் அறிக்கையில் பகிரங்கமாக அறிவித்த விடயத்தை தனித் துண்டுப் பேப்பரில் கையெழுத்து வைத்துத்தா என்பது, அப்படியே வைத்துக் கொடுத்தாலும் அதற்கு என்ன சட்டவலு இருக்கின்றது என்பதும் அதை வைத்து என்ன செய்ய முடி-யும் என்பதும் புரியவில்லை) மாவை, சிறீதரன் குழுவினர் வலியுறுத்தியிருக்கின்றனர்.

சுமந்திரன் அதனை இலகுவாக ஏற்றுக்கொண்டிருக்கின்றார். சஜித்துடன் பேசி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யமுடியும் என்று தெரிவித்திருக்கிறார். அதனடிப்படையில் இந்தக் குழு மீண்டும் 16ஆம் திகதி கூடி சஜித்தை ஆதரிப்பதற்கான காரணங்களை விளக்கி ஒரு அறிக்கையைத் தயாரிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக, செப். 14 மீண்டும் நடக்க இருந்த கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை நிறுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கட்சி இப்படி முடிவெடுத்தாலும் தான் பொது வேட்பாளரை ஆதரிப்பேன் என்றும் அதற்காகத் தன்னைக் கட்சி வெளியேற்றினால் அதையும் தான் ஏற்றுக்கொள்வார் என்றும் சிறீதரன் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார். இதனால் அங்கு ஒரு சர்ச்சை ஏற்பட்டுள்ளது. அது சிறீதரனின் தனிப்பட்ட நிலைப்பாடு என்றவாறு சி.வி.கே.சிவஞானம் ஏற்கப்போக, அப்படிச் செய்யமுடியாது கட்சி ஒரு தீர்மானம் எடுத்த பின்னர் எப்படி அதனை மீறி அதன் உறுப்பினர்கள் செயற்படமுடியும் என்று பலரும் சீற, இப்போது இந்த விடயத்தைக் கிளறாமல் தேர்தல் முடிந்த பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்ற வகையில் சுமந்திரன் அதனை அடக்கியுள்ளார்.

ஆக மொத்தத்தில் சஜித்தைக் கட்சி ஆதரிப்பதற்கான விளக்கத்தை மக்களுக்கு தெளிவுபடுத்தி ஒரு விரிவான அறிக்கை வெளியிடப்படவேண்டும் என்பதுதான் நேற்றைய கூட்டத்தின் முடிவு. கட்சியின் மத்திய செயற்குழு சஜித்தை ஆதரிப்பது என்று கூடி எடுத்த தீர்மானத்தை அறிவித்தபோது, அதற்கான காரணங்கள் எவற்றையும் சுமந்திரன் விளக்கியிருக்கவில்லை. சும்மா மொட்டையாக, இன்றைய கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன, அதிலொன்று சஜித்தை ஆதரிப்பது என்ற வகையில் அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டார். அதனால் இப்போது கட்சியின் முடிவுக்கான காரணங்களை விளக்கி, அதற்கு முன்பாக சஜித்திடமிருந்து அவர் கூறியிருப்பவற்றுக்கான வாக்குறுதிகளை கட்சி தனியே பெற்றுக்கொண்டு அறிக்கை வெளியிடுவதே நேற்றைய முடிவு.

ஆனால், இந்த முடிவைத் திரிபுபடுத்தும் வகையில் அல்லது, அதை மக்கள் வேறு விதங்களில் புரிந்துகொள்ளும் வகையில்தான் மாவை சேனாதிராசவும் சிறீதரனும் நேற்று ஊடகங்களுக்குத் தகவல்கள் வழங்கியிருந்தார்கள்.

"நாங்கள் உங்களுக்குத்தான் ஆதரவு சேர்" என்ற கதை மாதிரித்தான் இருக்குமோ!

இடிமின்னல்

## பதவி வெறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச உத்தியோகத்தர்கள் அறிவிக்காமல் சேவைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் சில சந்தர்ப்பங்களில் சேவையில் இருந்து விலகுவதாக அறிவித்தல் வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கு மேல் ஆவது கண்காணிக்கப்பட்டுள்ளதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மில்கோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

400 கிராம் பொதி 75 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி அதன் புதிய விலை 1,050 ரூபா எனவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணிலை வெல்லவைக்கப் பார்க்கின்றனர். சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவர்.

ரணில் விக்ரமசிங்கவும் அநுரகுமார திசாநாயக்கவும் இரவில் இரகசியமாக பேசிக்கொள்கின்றனர். வெள்வேறாகப் போட்டியிடுவோர் ஏன் பேச வேண்டும்? வெற்றியைத் தக்கவைப்பதற்கான வழிகளையே இவ்விருவரும் ஆராய்கின்றனர். அனுர ஆட்சிக்கு வந்தால், ஆறு மாதங்களில் மீண்டும் ஜனாதிபதியாகலாமென ரணில் நினைக்கிறார். இவை எதுவும் நடக்காது. சிங்களப் பகுதிகளில் எந்த எதிர்ப்புக்களுமின்றி கூட்டங்களில் பங்கேற்கிறேன். ஐ.எஸ்.ஐ.எஸ் என்று எனக்கு வழக்குத் தொடுத்தனர். வாக்களிப்பதற்காக பஸ்களில் மக்களைக்கொண்டு வந்ததாகக் குற்றம் சுமத்தினர். இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து நீதிமன்றம் என்னை நிரபராதி எனத் தீர்ப்பளித்தது. இதனால்,சிங்கள மக்கள் என்னை நம்புகின்றனர்' என்று கூறினார். நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மில்கோ பால் மாவின் விலையை குறைக்கவுள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 1 கிலோ பால் மா பொதி ஒன்றின் விலை 190 ஷரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலைக்கு 2,585 ஷரூபாவாகும்.400 கிராம் பொதி 75 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி அதன் புதிய விலை 1,050 ஷரூபா எனவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## எதிர்காலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நடைபெற்ற 'ரணிலால் இயலும்' கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். அடுத்த ஜனாதிபதி தேர்தலில்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பொதுக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதிகளவான மக்கள் ஏன் தொப்பியை அணிந்திருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். எனக்கு கிளிநொச்சியில் ஒரு பெண்மணி தந்தார். நாட்டை மீட்டெடுத்து மக்களுக்காக பணியாற்றி நாட்டு மக்களை தட்டுப்பாடுகள் இன்றி வாழ்வித்ததால் இந்த தொப்பியைத் தந்தார். எவரும் முன்வராத வேளையில் தட்டுப்பாடுகள் நிறைந்த நாட்டையே ஏற்றுக்கொண்டேன். இலட்சம் ஷரூபாவை விட இந்த தொப்பி எனக்குப் பெறுமதியானது. கடந்த காலங்களில் என்னை விமர்சித்த அமைச்சர்கள் இன்று

என்னோடு கைகோர்த்துள்ளனர். மக்கள் பசியிலிருப்பதை நாம் விரும்பாத காரணத்தினாலேயே ஒன்றுபட்டோம். சஜித்தும் அனுரவும் மக்கள் கஷ்டத்தை போக்க என்ன செய்தார்கள்? நான் செய்த சேவைக்கே எனக்கு கிளிநொச்சி பெண்மணி பாராட்டி தொப்பியை அணிவித்தார். வேறு எவரும் இந்த நாட்டை ஏற்க முன்வரவில்லை. மக்களை கஷ்டத்திலும் தட்டுப்பாட்டிலும் வாட விட்டு சஜித் வேடிக்கை பார்த்தார். அனுர செய்தவை ஒன்றும் இல்லை. மக்களை அநாதரவாக விட்டுச் சென்றனர். இங்கு மக்கள் பொருட்களின் விலையை குறைக்குமாறு கோரினார்கள். அடுத்த வருடத்தில் அதனை செய்வோம். நாம் தொடர்ந்தும் வறிய நாடாக இருக்க முடியாது. நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். நாட்டின் இறக்குமதிக்கு செலுத்த போதுமான நிதி இல்லை. எனவே ஐஎம்எப் அமைப்பும் உலக வங்கியும் கடன் வழங்கும் 18 நாடுகளும் எமக்கு உதவ முனவந்துள்ளன. ஆனால் கட்டாயமாக நாம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

அதனை செயற்படுத்தவே இயலும் ஸ்ரீலங்கா திட்டத்தை செயற்படுத்தவுள்ளோம். நாம் வரி அதிகரிப்பு என்ற கஷ்டமான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. அனைவருக்கும் அதன் சுமை தெரிந்தது. ஆனால் 6 மாதங்களில் ஷரூபாவின் பெறுமதி அதிகரித்து பொருட்களின் விலை குறையவும் வழி ஏற்பட்டது. அதனால் தற்போது மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்கிறது. அது போதுமானதல்ல. அடுத்த வருடத்தில் மேலும் பல சலுகைகளை மக்களுக்கு வழங்குவோம். குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கான நிவாரண திட்டங்களும் தொடர்ச்சியாக வழங்கப்படும். அரச ஊழியர்கள் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. உறுமய திட்டத்தில் பெருமளவானர்களுக்கு காணு உறுதிகள் வழங்கப்படும். மக்களை கஷ்டத்திலிருந்து மீட்க விவசாய நவீனமயப்படுத்தல் திட்டத்தை செயற்படுத்துவோம். சஜித்தும் அனுரவும் நாட்டின் வருமானத்தை எவ்வாறு அதிகரிப்பார்கள் என்று மக்கள் கேள்வி கேட்க வேண்டும். அனுராதபுரத்தை தம்புள்ளை போன்ற கலாச்சார மையமாக மாற்றுவோம். புதிய பொருளாதாரத்துடன் மாற்றத்தை ஏற்படுத்தவே நாம் வாக்கு கேட்கிறோம். நான் ஜே.ஆர்.ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாச உள்ளிட்ட தலைவர்களிடமே அரசியல் கற்றேன். பிரேமதாச ஜனாதிபதி ஒருபோதும் சவால்களைக் கண்டு பாய்ந்தோட கற்பிக்கவில்லை. அவரின் கொள்கைகயை முன்னோக்கி கொண்டுச் செல்லவே வாக்கு கேட்கிறேன். மக்கள் கஷ்டத்தில் இருந்த வேளையில் நான் பயந்து ஓடவில்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சியினர் எம்மோடு கைகோர்த்து உதவுமாறு கோரிக்கை விடுக்கிறோம். அரசியல் குரோதங்களை கைவிடுங்கள். மக்கள் பசியை போக்க அனைவரும் ஒன்றுபட வேண்டியதே காலத்தின் தேவையாகும். எனவே எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். அதனை செய்யாவிட்டால சிலிண்டரும் இருக்காது விவசாயமும் இருக்காது - என்றார்.

## அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்குத் தெரிந்ததை மட்டுமே என்னால் வழங்க முடியும் என்று உறுதியளிக்க முடியும். ஏதாவது சாத்தியமற்றது என்றால், நான் அவ்வாறு கூறுவேன். எனது பரப்புரையில் நேர்மை மற்றும் யதார்த்தமான வாக்குறுதிகளே உள்ளன.

'புதிய சிந்தனையாளர்கள்' தேசத்தின் எதிர்காலம் என்ற வகையில் இளைஞர்கள், இலங்கையின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளைத் தேடவும், தொழிலதிபர்கள் மற்றும் தொழில்முனைவோராகவும், வாய்ப்பை ஏற்படுத்தவும் திட்டங்களை கொண்டிருக்கின்றோம்.

எங்களுடன் இணைந்து இந்த தேர்தலை வெற்றிபெற உதவுமாறு உங்களை அழைக்கிறேன். கொழும்பில் இருந்து மட்டக்களப்பு வரை பயணிப்பவர்கள் மட்டுமல்ல, மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்த தலைவர்கள் புதிய தலைவர்களாக உருவாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதற்கு ஆதரவளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன் - என்றார்.

## நாட்டை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகவல்கள் வெளியாகியுள்ளன. தாம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை இழந்துவிட்டனர் எனவும், ஜனாதிபதியுடன் தொடர முடியாது என்பதை உணர்ந்து, தற்போது நடு வழியில் நிற்கின்றார்கள் என்றும், தமது செயற்பாடுகளுக்காக வருந்துகின்ற சிலர் உணர்ந்துள்ளனர். இவர்களில் சுமார் 80 பேர் ஏற்கனவே விசாவைப் பெற்றுக் கொண்டுள்ளனர், ரணில் விக்கிரமசிங்க தங்களின் பாதுகாவலர் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்காக செயற்படுவதற்கு மாத்திரமே ஜனாதிபதி அவர்களைப் பயன்படுத்துகின்றார் என்பதையும் அந்தக் குழுவினர் உணர்ந்துள்ளனர் - என்றார்.

## எதிர்ப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீர்த்தாரைத் தாக்குதலும் மேற்கொண்டனர்.

போராட்டத்தினை வழிநடத்திய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் கைது செய்யப்பட்டார். ஏனையவர்கள் அங்கியிருந்து கலைந்து செல்வதற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

## இறக்குமதிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது நாட்டுக்குப் பண்டங்கள் இறக்குமதி செய்யும்போது அறவிடப்படும் வரி வகைகளாவன, சுங்க இறக்குமதி வரி, செஸ் வரி, விசேட பண்டங்களுக்கான வரி மற்றும் துறைமுகங்கள் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி தொடர்பிலான கொள்கை ரீதியாக அமுல்படுத்த வேண்டியதும், மற்றும் சமகாலத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்நாட்டு கைத்தொழில் மற்றும் வணிகத் துறையிலுள்ள தரப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கீழ்வரும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது :

- விசேட பண்டங்கள் வரிக்கிணங்க ஒருசில இறக்குமதிப் பண்டங்களைக் குறித்த வரியிலிருந்து விடுவித்து சுங்க இறக்குமதி வரி உள்ளிட்ட பொதுவான இறக்குமதி வரிக் கட்டமைப்பை உட்சேர்த்தல்
- கபிலச் சீனி இறக்குமதிக்கான வரியைத் திருத்தம் செய்தல்
- உள்நாட்டுக் கைத்தொழில்களை வலுப்படுத்தும் வகையில் கைத்தொழில் அமைச்சின் விதந்துரைகளுக்கமைய சுங்க இயைபுமுறைக் குறியீடு 225 இன் கீழுள்ள, பாதணிகள், பொதிகள், மின் உபகரணங்கள், பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் நடுநிலைப் பொருட்கள் தொடர்பிலான இறக்குமதி வரியைத் திருத்தம் செய்தல்
- சிறுவர் மற்றும் வளர்ந்தோருக்கான சுகாதார உறிஞ்சுதுணிகள் (னுயைிநசள) மற்றும் அவற்றுக்கான மூலப்பொருட்கள் மீதான வரியைக் குறைத்தல்.
- இலங்கையில் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதற்காகவும், மீள்சுழற்சிக்கு ஏற்புடைய வகையிலான வரித் திருத்தங்களை அறிமுகப்படுத்தல்
- உள்நாட்டு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தித் தொழிற்றுறை, அச்சிடல் மற்றும் அச்சு நிறப்பூச்சுக்கள் தொழிற்றுறை, உள்நாட்டு சலவை இயந்திரம், லயிட்டர் உற்பத்தி தொழிற்றுறை மற்றும் சிறுவர்களுக்கான தைத்த ஆடைகள் இறக்குமதி தொடர்பிலான வரி ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.
- பனை மற்றும் பனம் பொருட்கள் உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல், மின்சாரத்தால் இயங்குகின்ற விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உள்நாட்டு மருந்து உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்படும் திப்பிலியை தனிவேறாக அறிந்து கொள்வதற்காக புதிய தேசிய உபபிரிப்பு சுங்க குறியீட்டை அறிமுகப்படுத்துவதற்கும், உள்நாட்டு மருந்து உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் போதான செஸ் வரி விடுவிப்புக்களில் காணப்படும் பொறிமுறைகளைத் தளர்த்துதல்.

மேற்குறிப்பிட்டவாறான வரித் திருத்தங்களை அமுல்படுத்துவதற்காக கீழ்வரும் படிமுறைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கட்டளையொன்றை வெளியிட்டு, அதன்மூலம் சுங்க இறக்குமதி வரியை திருத்தம் செய்தல்
- 1970 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் செஸ் வரியைத் திருத்தம் செய்தல்
- 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை வெளியிடல்.
- ஏற்புடைய வரித் திருத்தங்களுக்கு இணையாக 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# சமூக விடுதலைக்காக வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதத்தை பயன்படுத்துவோம்

## பாரத் அருள்சாமி அழைப்பு





(க.கிஷாந்தன்)

மலையக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் எமது மக்களின் ஒரே தெரிவு சுயாதீன ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவாகவே இருக்க வேண்டும். எனவே, எமது சமூக விடுதலைக்காக வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதத்தை பயன்படுத்துவோம் - என்று இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டி கண்டி மாவட்டத்தில் நியூபிகொக் தோட்டம், சப்ளி தோட்டம், கலுகல்ல தோட்டம், மெல்போர்ட் தோட்டம், டெல்டா தோட்டம், ஸ்டெலன்ட்பேர்க் தோட்டம், டெல்டாதோட்டம் மற்றும் புப்புரஸ்ஸ தோட்ட ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் இ.தொ.கவின் சார்பில் பாரத் அருள்சாமி பங்கேற்றிருந்தார்.

பெருந்திரளான மக்கள் இந்தக் கூட்டங்களில் பங்கேற்று தமது ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதிப்படுத்தினர்.

இதன்போது உரையாற்றிய பாரத் அருள்சாமி -

பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை மற்றும் வீட்டுரிமை பெற்றுக்கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. அஸ்வெசும திட்டத்தில் பெருந்தோட்டப் பகுதிகளும் உள்வாங்கப்பட்டன. அதன்மூலம் பலர் தற்போது நன்மை பெறுகின்றனர். தமக்கு சேவை செய்யக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி என்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர். ஏனெனில் நெருக்கடியின்போது ஏனையோர்போல் ஒடி ஒளியாது, அவரே முன்வந்து நாட்டை பொறுப்பேற்று வழிநடத்தினார்.

எனவே, எதிரணிகள் தனிப்படை அமைத்து எவ்வாறுதான் போலி பிரசாரம் முன்னெடுத்தாலும் அவற்றை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியாகியுள்ளது. நாட்டில் மலையக மக்கள் வாழும் பகுதிகளிலெல்லாம் இ.தொ.காவின் பேராதரவுடன் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதி வெற்றிபெறுவார். கண்டி மாவட்டத்திலும் வெற்றிக் கொடி பறக்கும். என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்ற பின்னர் மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதப்படும் எனவும், தோட்டத் தொழிலாளர்கள் சிறுதோட்ட பங்குதாரர்களாக்கப்படுவார்கள் எனவும் பாரத் அருள்சாமி மேலும் கூறினார்.

இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, இ.தொ.காவின் பிரதி பொதுச்செயலாளர் செல்லமுத்து, மாவட்ட தலைவர்கள் மற்றும் கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்களும் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.(05)

# தென்பகுதி வேட்பாளர்களுக்கு அளிக்கும் வாக்கு எமது தலையில் நாமே அள்ளிப்போடும் மண்

## அரியநேத்திரன் தெரிவிப்பு



தென்பகுதி வேட்பாளர்களுக்கு அளிக்கும் வாக்கு எமது தலையில் மண் அள்ளிப்போடும் செயல் என தமிழ் பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் -

இன்று பரவலாக பேசப்படுகின்ற மூன்று தென் பகுதி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் அளிக்கின்ற வாக்கானது எமது தலையில் மண்ணை நாமே அள்ளி கொட்டுவதற்கு சமமாகவே இருக்கும் என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை.

இதில் சஜித் பிரேமதாஸ ஆயிரம் பன்சாலைகளை கட்டுவதாக தெரிவித்து இருக்கின்றார். இந்த நிலையில் யாரோ ஒரு கட்சி கூறுகின்றது என்பதற்காக நீங்கள் அவருக்கு அளிக்கின்ற வாக்கானது பன்சாலைகளுக்கு வைக்கின்ற ஒவ்வொரு கல்லாக தான் இருக்கும்.

அதேபோல், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீங்கள் அளிக்கின்ற வாக்கானது இருக்கின்ற நிலங்களை இன்னும் இழந்து செல்வதாகவே அமையும். ரணில் விக்கிரமசிங்கவே ஒரு கட்டமைப்பாக ஒரு தேசமாக ஓர் இனத்தின் விடுதலைக்காக இருந்த எம்மை சிதைத்த பெருமை அவரைத் தான் சாரும்.

அதே போல் அனுரகுமார திசாநாயக்க எமது இணைந்த வடக்கு கிழக்கை பிரித்தவராக இருக்கின்றார். இவ்வாறானவர்களை தென்பகுதியில் இருந்து அழைத்து வந்து மாலை போட்டு பொன்னாடை போர்த்தி வரவேற்கின்ற ஒரு வெட்கம் கெட்ட சமூகமாக நாம் மாறி வருகின்றோம்.

ஆகவே இந்தப் பொதுக் கட்டமைப்பு ஊடாக ஒரு செய்தியை சொல்வதற்காகவே நான் வந்திருக்கின்றேனே தவிர, ஒரு ஜனாதிபதியாக வருவதற்கு அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அந்த கதிரையை தட்டி பறிப்பதற்காகவும் இல்லை.

ஈழ மண்ணில் இழந்த உரிமைகளை மீட்பதற்காகவும் நாங்கள் நாங்களாகவே இருக்கின்றோம் என்பதை சர்வதேசத்திற்கும் இந்தியாவிற்கும் தென் இலங்கைக்கு ஏன் ஒன்பதாவது ஜனாதிபதியாக வர இருக்கின்றவருக்கும் அந்தத் தகவலை நாங்கள் கொடுக்க இருக்கின்றோம்.

எங்களுடைய வடக்குக் கிழக்கில் ஓர் இனமாக ஒரு தேசமாக ஒன்றிணைந்த கட்டமைப்புக்குள் சமஸ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை பெறுவதற்காக எங்களுடைய இனம் ஒன்றிணைந்து தனது ஆதரவை தெரிவிக்கின்றது என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் அவர்களுக்கு சொல்லி இருக்கின்றோம்.

இந்த 13 நாள்களுக்கு பல போலியான செய்திகள் என்னை பற்றி வரலாம். இருபதாம் திகதி கூட அரியநேத்திரன் இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றார் என்ற செய்தி கூட இந்த சமூக வலைத்தளங்களின் ஊடாக வெளிவரலாம். ஆனால் நான் எந்த விதமான மாற்றத்திற்கும் உட்படப் போவதில்லை.

ஆகவே, நீங்களும் போடுகின்ற புல்லடியானது எமது இனத்திற்கான புள்ளடி எமது விடுதலைக்கான புள்ளடி எமது மண்ணுக்கான மண் மீட்புக்கான புள்ளடி என்பதை உணர்ந்து செயற்படுங்கள் எனத் தெரிவித்தார். (05-100)

# தமிழ் மக்களிடம் எஞ்சியிருக்கும் ஒரே ஆயுதம் வாக்குகள்தான்

## இலக்குத் தவறாது பிரயோகிக்க கோருகிறார் ஐங்கரநேசன்



தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெரும் பலமாக முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறும் வரைக்கும் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்களின் ஆயுதப் பலம் பேரம் பேசக்கூடிய

பெரும் சக்தியாக இருந்தது. இப்போது எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரேயொரு ஆயுதம் வாக்குகள்தான்.

யுத்தத்தின் பின்னரான கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் இந்த வாக்குப் பலத்தை நாம் வீணடித்துவிட்டோம். இம்முறையாவது அவற்றை இலக்குத் தவறாது பிரயோகிப்போம் என்று தமிழ்த்

தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனை ஆதரித்து ஞாயிற்றுக்கழமை ஏழாலை ஐக்கிய நாணயசங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன்

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் தமிழினம் அரசியல் ரீதியாக மிகமோசமாகப் பலவீனம் அடைந்துள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகத்தை வனவளத்

திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் ஊடாகச் சட்டரீதியாகக் கையகப்படுத்தி வருகின்றது.

தமிழர் தாயகத்தின் இயற்கை வளங்களை, பொருளாதாரத்தை, பண்பாட்டைத் திட்டமிட்டுச் சிதைத்து வருகின்றது. இவற்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறது.

தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையாக மாத்திரமே உலகுக்குக் காட்டி வருகின்றார்கள். இலங்கைத் தீவில் இன்று ஏற்பட்டுள்ள

பாரிய பொருளாதார நெருக்கடிக்குத் தமிழ் மக்கள் மீது தொடுத்த யுத்தமே மூலகாரணம் ஆகும். மாறிமாறி ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் கடன் வாங்கி யுத்தத்தை முன்னெடுத்தமையே நாட்டைப் பொருளாதாரப் படுகுழிக்குள் தள்ளியது. ஆனால், இந்தக் கசப்பான உண்மையை ஏற்க எந்தத் தென்னிலங்கைத் தலைவர்களும் தயாராக இல்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைத் தொடர்ந்தும் இழைத்துக் கொண்டிருக்கமுடியாது. இதனைக் கருத்திற் கொண்டே இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்

பொதுவேட்பாளராகப் பா. அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் தனிநபர் அல்ல் ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசத்தினதும் குரல். அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் ஓங்கி ஒலிப்போம் என்றும் தெரிவித்தார். (05)

# தேசிய மட்டத்தில் வென்ற மாணவரை வரவேற்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில்







(எம்.ஏ.றமீஸ்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார போட்டிகளில் திறமைகளை வெளிக்காட்டி தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்களை பாராட்டி வரவேற்கும் நிகழ்வு திங்கட்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது தேசிய மட்ட சாதனை மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.செய்னுதீன், பிரதி அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் போன்றோர் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர்.

கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பில் அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகள் கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கொழும்பு சாஹிறா கல்லூரியில் இடம்பெற்றன. இப்போட்டிகளின் போது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்கள் நான்கு போட்டிப் பிரிவுகளில் கலந்துகொண்டு நான்கு போட்டிகளிலும் முதலாமிடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

சிரேஷ்ட மாணவர்களுக்கான ஹஸீதா, ரபான் நடனம் ஆகிய இரு குழுப் போட்டி நிகழ்ச்சிகளிலும், அரபு எழுத்தணி, அரபுத் தமிழ் இலக்கியம் ஆகிய இரு தனி நிகழ்ச்சிகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

இப்போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, கல்லூரியின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோருக்கு தமது நன்றியையும் தெரிவிப்பதாக அதிபர் ஏ.எச்.பௌஸ் இதன்போது தெரிவித்தார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செவிடன் காதில் ஊதிய சங்கு

இலங்கையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகம் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தத் தேவையான உறுதியான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை குறித்துப் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். அழிவுகரமான உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் – பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் இன்னும் உண்மைக்காகவும், நீதிக்காகவும், இழப்பீடுக்காகவும் காத்திருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டிய அவர் இனிவரும் ஆட்சியாளர்களாவது உறுதியான மாற்றங்களைச் செய்யவேண்டும் என்றார்.

அரசுத் தலைவர் தேர்தல் நடப்பதற்கு இன்னும் 10 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில் அவரது கருத்து வந்துள்ளது. துரதிர்ஸ்டவசமாக, இந்தத் தேர்தலில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் ஒரு பேசு பொருளாகவே இல்லை என்பதுதான் உண்மை. தேர்தலில் நிற்கும் எந்தவொரு வேட்பாளரும் தனது தேர்தல் அறிக்கையில் மனித உரிமைகள் விவகாரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றோ, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசின் நிலைப்பாட்டில் தாம் சாதகமான மாற்றங்களைச் செய்வோம் என்றோ உறுதி மொழி எதனையும் வழங்கவில்லை.

உறுதிமொழி வழங்கினாலே அதனைச் செயற்படுத்தாத தலைவர்கள் மத்தியில், வரப்போகும் தலைவரிடம் இருந்த மாற்றத்தை எதிர்பார்ப்பது இயலாத காரியம். 'அரகலய' போன்ற போராட்டங்களுக்குப் பின்னரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினரைத் தண்டிப்பது என்பது தம்மைத் தேசத் துரோகிகளாகக் காட்டிவிடும் என்று அச்சப்படும் தலைவர்கள், மனித உரிமைகள் விடயத்தில் முற்றிலும் மாறான நிலைப்பாடுகளை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே ஐ.நா. உயர் ஆணையரின் இந்த அழைப்பு இலங்கைத் தலைவர்களைப் பொறுத்தவரையில் செவிடன் காதில் ஊதிய சங்கைப்போன்றதுதான்.

"கடந்த மற்றும் தற்போதைய மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமை ஓர் அடிப்படை பிரச்சினையாகும்" என்று ஐ.நா. உயர் ஆணையர் தெரிவித்துள்ளார். ஆனால் சிங்கள, பௌத்த பெருந் தேசியவாதத்தால் கட்டமைக்கப்பட்டுள்ள, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தலைவர்களைக் கொண்ட இலங்கையில் மனித உரிமைகளை மதிப்பதற்கும் அதனைப் பேணுவதற்கும் பொறுப்புக்கூறலோடு நடந்துகொள்வற்கும் இன்னும் தயாராகவில்லை. அதனால் ஐ.நா. உயர் ஆணையரின் இதுபோன்ற மென்மையான கோரிக்கைகள் அவர்களை ஒருபோதும் சரியான பாதைக்குத் திருப்பாது. பதிலாக அழுத்தம் தரத்தக்க கடுமையான நடவடிக்கைகளே சில குறுகிய முன்னேற்றங்களையாவது ஏற்படுத்தும். அதற்குத் தன்னால் முடிந்தவற்றை ஐ.நா. உயர் ஆணையர் மேற்கொள்ளவேண்டும்.

# பிரிட்டன் குழந்தைகள் மகிழ்ச்சியாக இல்லை!

**சாரா ஷமீம்**



பிரிட்டனில் வாழும் குழந்தைகளும் இளைஞர்கள் – யுவதிகளும் மகிழ்ச்சியில்லாமலும் வாழ்க்கையில் திருப்தி அடையாமலும் வாழ்கின்றனர். அதே வயதுகளில் ஐரோப்பியக் கண்டத்தின் பிற நாடுகளில் வாழும் குழந்தைகளிடமும் இளைஞர்களிடமும் நடத்திய ஆய்வுகள் மூலம் இது தெரியவந்திருக்கிறது. 'த சில்ட்ரன்ஸ் சொசைட்டி' என்ற அறக்கட்டளை நிறுவனம் 'த குட் சைல்ட்ஹுட் ரிபோர்ட்-2024' என்ற பெயரில் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

பத்து வயது முதல் பதினேழு வயது வரையிலான குழந்தைகளில் 11மூ பேர், தங்களுடைய வாழ்க்கை வசதியாக இல்லை என்று தெரிவித்துள்ளனர். ஆறில் ஒரு பங்கு குழுவினர் வீடுகளில் விலைவாசி உயர்வு காரணமாக குடும்பச் செலவுக்குப் பணம் போதாமல் தவிக்கின்றனர், எனவே வாழ்க்கை திருப்தியாக இல்லை.

முந்தைய தலைமுறைகளுடன் ஒப்பிடுகையில் இப்போதைய தலைமுறை ஏன் மகிழ்ச்சியோ உற்சாகமோ இல்லாமல் இருக்கிறார்கள் என்பதற்கான காரணங்கள் ஆய்வுசெய்யப்படுகின்றன.

### மூன்று ஆய்வறிக்கைகள்

ஒன்றல்ல மூன்று நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள் இதை உறுதிப்படுத்தியுள்ளன. ஐந்து குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் அதாவது 40மூ குழந்தைகள் விலைவாசி உயர்வது குறித்து மிகவும் வருத்தப்படுகின்றனர். அது அவர்களுடைய விளையாட்டு, கல்வி, பொழுதுபோக்கு, உணவு, உடை என்று எல்லாவற்றையும் நேரடியாகவே பாதிக்கிறது.

தங்களுக்குப் பள்ளிக்கூடமே பிடிக்கவில்லை என்று 14மூ குழந்தைகள் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னர் இப்படியொரு ஆய்வு 2009இல் நடந்தது. மகிழ்ச்சியாக இல்லை என்று கூறியவர்களில் பெண் குழந்தைகள்தான் அதிகம்.

"பொதுவாக பிரிட்டனில் குழந்தைகளுக்கு வாழ்க்கையில் சலிப்போ மகிழ்ச்சிக் குறைவோ ஏற்பட்டதாக இதுவரை கேள்விப்பட்டதே இல்லை. இந்த அறிக்கையைத் தயாரித்து படித்துவிட்டு நாங்களே மிகவும் அதிர்ச்சியில் ஆழ்ந்துவிட்டோம்" என்கிறார் அறக்கட்டளையின் தலைமை நிர்வாகி மார்க் ரஸ்ஸல்.

2009க்குப் பிறகு குழந்தைகளுடைய மகிழ்ச்சி பல்வேறு அம்சங்கள் தொடர்பாக குறைந்துகொண்டேவந்திருக்கிறது. குழந்தைகளுக்கு வாய்க்கும் நண்பர்கள், குழந்தைகளுடைய தோற்றம், பள்ளிக்கூடம், பள்ளிக்கூடத்தில் அளிக்கும் பாட வேலைகள் என்று பல அம்சங்கள் இந்த மகிழ்ச்சி குறைய காரணங்களாக இருக்கின்றன. பெரும்பாலான குழந்தைகளுக்கு அவரவர் குடும்பச் சூழல் மகிழ்ச்சிகரமாகவே தொடர்கிறது என்பது ஆறுதல் தருகிறது.

2021 -2022இல் குழந்தைகள், தங்களுடைய குடும்பச் சூழல் மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக கூறியிருந்ததுடன் தங்களுடைய தோற்றம் பற்றி அதிகம் கவலைப்படவே இல்லை. இந்த முறை அதில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் சமூக ஊடகங்கள்தான் என்கிறார் ரஸ்ஸல். சமூக ஊடகங்களில் வெவ்வேறு ஊர்கள், நாடுகளைச் சேர்ந்த குழந்தைகளையும் மற்றவர்களையும் படங்களாகப் பார்க்கின்றனர். அவர்களுடைய தோற்றம், உடை, அழகு ஆகியவை போலத் தங்களுக்கு இல்லை என்று மனச்சோர்வு அடைகின்றனர்.

'குழந்தைகளை வெளியூருக்கு அழைத்துச்சென்றால் மாறுதல் ஏற்படும் – மகிழ்ச்சி அடைவார்கள், ஆனால் அதற்குப் பணம் இல்லையே?' என்று 50மூ பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். 'வெளியூர் பயணம் வேண்டாம், உள்ளூரிலேயே அவர்கள் விரும்பும் விளையாட்டு, பாட்டு, நடனம் என்று பிற பொழுதுபோக்குகளுக்கு மாதச் சந்தா கொடுக்கக்கூட பணம் இல்லாமல் விலைவாசி உயர்ந்துகொண்டேவருகிறது' என்று அவர்களில் பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

### கோவிட்-19

பிரிட்டனில் உள்ள குழந்தைகளின் மகிழ்ச்சியற்ற வாழ்க்கைக்கும் மனச்சோர்வுக்கும் 2019இல் ஏற்பட்ட கோவிட் பெருந்தொற்று நோயும், சமீபகாலமாக மக்களுடைய வாழ்க்கையை ஆக்கிரமித்துவரும் சமூக ஊடகங்களும் முக்கிய காரணங்கள் என்கிறார்கள். இவ்விரண்டும் பிரிட்டனை மட்டுமல்ல பிற ஐரோப்பிய நாடுகளையும் பாதித்தனவே என்கிறார் ரஸ்ஸல். அப்படியானால் பிரிட்டனில் மட்டும் ஏன் குழந்தைகளுக்கு அதிக சோகம்?

வாழ்க்கை திருப்திகரமாக இல்லை என்று 15 வயதுக் குழந்தைகளில் 25மூ பேர் பிரிட்டனிலும், 7மூ பேர் டச்சு (ஹாலந்து – நெதர்லாந்து) நாட்டிலும் தெரிவித்துள்ளனர்.

விகிதாச்சாரப்படி பார்த்தால், பிற ஐரோப்பிய நாடுகளைவிட பிரிட்டனில் ஏழைக் குழந்தைகள் அதிகம் என்கிறார் ரஸ்ஸல். பிரிட்டனில் 43 லட்சம் குழந்தைகள் அதாவது 30மூ குழந்தைகள் வறிய குடும்பத்தில்தான் வாழ்கின்றனர். பிரிட்டனின் சராசரி தனிநபர் வருமானத்தில் 60மூக்கும் குறைவாகப் பெறும் குடும்பங்களை, 'வறிய குடும்பங்க'ளாக அரசு அறிவித்துள்ளது. நெதர்லாந்தில் (டச்சு – ஹாலந்து) 12.7மூ குழந்தைகள் வறுமையில் வாடுவதாக 2021 அறிக்கை தெரிவிக்கிறது.

### பொருளாதாரம் காரணம்

பிற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பிரிட்டனில் பொருளாதாரம் சார்ந்த துயரங்கள் அதிகம். நாட்டை இதற்கும் முன்னால் ஆண்ட கன்சர்வேடிவ் கட்சி, நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக அரசின் செலவுகளைக் குறைத்துக்கொண்டேவந்தது. 2013இல் ஆக்ஸ்ஃபாம் நடத்திய ஆய்வும் இதை உறுதிப்படுத்துகிறது. சிக்கன நடவடிக்கையாக அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியளவும் சுகாதாரச் செலவுகளும் வெட்டப்பட்டேவந்தன. இவை போக, பிற சமூக நல்வாழ்வுச் செலவுகளும் படிப்படியாக குறைக்கப்பட்டன.

இதன் காரணமாக அனைத்து வருவாய்ப் பிரிவு மக்களும் அடிக்கடி போய்வந்த நூலகம், சமூக சமுதாயக் கூடங்கள், இளைஞர் மையங்கள் போன்ற பொதுஇடங்களில் பல மூடப்பட்டன. இதைக் கடுமையான வறுமை, மனித உரிமைகள் மீறலுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் சிறப்புப் பிரதிநிதி 2018இல் ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதுபோக, பிரிட்டனில் கல்விமுறையானது அனைத்து குழந்தைகளுக்குமானது அல்ல என்கிறார் ரஸ்ஸல். பின்லாந்து, ஹாலந்து நாடுகளைவிட பிரிட்டனில் குழந்தைகளுக்கு மாதாந்திர டெஸ்ட், வாராந்திர டெஸ்ட், காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு என்று தொடர்ந்து தேர்வுகளாகவே நடத்தும் வழக்கம் இருக்கிறது. இதனால் பள்ளிக்கூட மாணவர்கள் நிம்மதி இழக்கின்றனர்.

ஏட்டுக் கல்வியும் தொழில் கல்வியும் ஒரே வகையில் மதிப்பிடப்பட வேண்டும் என்கிறார் ரஸ்ஸல். ஏட்டுக் கல்வியுடன் குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் தர வேண்டும் அப்போதுதான் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு தினந்தோறும் வந்தாலும் அவர்களுடைய மனம் பாடங்களில் ஒன்றும் என்கிறார்.

### பெண் குழந்தைகள்

ஆண் குழந்தைகளைவிட அதிக எண்ணிக்கையில் பெண் குழந்தைகள் கவலைப்படுகின்றனர். தங்களுடைய குடும்பச் சூழல், தங்களுடைய தோற்றம், தங்கள் பள்ளியின் கெடுபிடிகள் ஆகியவற்றை நினைத்து அதிகம் வருந்துகின்றனர். மாணவர்களில் 20மூ, மாணவிகளில் 31மூ தங்களுக்கு, வாழ்க்கை திருப்தியாக இல்லை என்று கூறியுள்ளனர். வளர்ச்சிக்கான பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (ஓஇசிடி) என்ற அமைப்பு 2022இல் எடுத்த ஆய்வும் இதைத் தெரிவிக்கிறது. பெண் குழந்தைகள் ஏன் அதிகம் கவலைப்படுகின்றனர் என்பதை அரசும் சமூகமும் கவனிக்க வேண்டும் என்கிறது அறிக்கை.

பெண் குழந்தைகளைப் பற்றி வீடுகளில் என்ன பேசுகிறார்கள், வெளியில் என்ன பேசுகிறார்கள் என்பதைப்போல உடன் படிக்கும் மாணவர்கள் அவர்களிடம் எப்படி நடந்துகொள்கின்றனர் என்பதும் இந்தக் கவலைகளுக்கும் மகிழ்ச்சியற்ற நிலைக்கும் முக்கிய காரணமாகத் தெரிகிறது. ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளைக் கேலிசெய்வது, மிரட்டுவது, அவமானப்படுத்துவது காரணமாக பெண் குழந்தைகளுக்குக் கவலையும் வருத்தமும் அதிகமாகிறது.

### எப்படி அளவிடுவது?

ஒரு குழந்தை மகிழ்ச்சியாக இருக்கிறதா, இல்லையா என்பதை அளவிட இதுவரை பொதுவான வழிமுறையோ, உத்தியோ இல்லை. கேள்விக் கேட்டு பெறப்படும் பதில்கள் அடிப்படையில் இது தீர்மானிக்கப்படுகிறது .

(8ஆம் பக்கம் பார்க்க..)

# ரணில் தோல்வியை உணர்ந்துள்ளார் அநுர சர்வதேச தொடர்புகளற்றவர்

## நாட்டை கொண்டு செல்ல சஜித் வெல்லவேண்டும் என்கிறார் ஹரீஸ்

(நூருல் ஹுதா உமர்)



சிங்கள மக்கள் ரணிலுக்கு வாக்கு போட மாட்டோம் என்று முடிவெடுத்து விட்டார்கள். தென்பகுதியில் நடைபெற வேண்டிய கூட்டங்களை ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் ரத்து செய்து விட்டார்கள். அடுத்து அநுரகுமார. இந்த நாடு பொருளாதார நிலையில் சிக்குண்டிருக்கும் வேளையில் வெளிநாடுகள் உதவிக்கு வர வேண்டும். எமக்கு ஆதரவு வழங்க வேண்டும். எனவே வெளிநாட்டு தொடர்புகள் இல்லாத ஒருவர் தான் அனுரகுமார. அவர் நமக்கு வேண்டாம். இந்த நாட்டில் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்க வேண்டும். நாட்டை நல்ல நிலையில் கொண்டு செல்ல வேண்டும். ஆகவே தான் இப்படிப்பட்ட ஒரு தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாசவை நாம் ஆதரிக்க வேண்டும் என ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

'வெல்லும் சஜித்' தேர்தல் பரப்புரை கூட்டமொன்று ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் சாய்ந்தமருதில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் -

சஜித் பிரேமதாஸவோடு நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக பேசி ஒப்பந்தம் செய்து முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்கின்ற ஒரு முடிவுக்கு பிறகு தான் நாங்கள் அவரை ஆதரிக்கின்றோம். ஒரு ஜனாதிபதியின் மகனாகவும், ஆறு வருடங்கள் வீடமைப்பு அமைச்சராகவும் இருந்திருக்கின்றார். தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றார். அவர் ஜனாதிபதியானால் இந்த நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு பல நாடுகளுடன் பேசிக் கொண்டிருக்கிறார்.

சாய்ந்தமருது, கல்முனை, சம்மாந்துறை போன்ற ஊர் மக்கள் வாக்களிக்கின்ற வாக்குகள் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்க முடியாது.

கண்டி, கம்பஹா, களுத்துறை, கொழும்பு போன்ற இடங்களில் இருக்கின்ற மக்கள் தான் இவருக்கு வாக்களிக்க வேண்டும். சிங்கள மக்களும் சொல்கின்றார்கள் இவருக்கு வாக்களிக்க மாட்டோம் என்று காரணம் இவருடன் இருப்பவர்கள் சரியில்லாதவர்கள் என்று. மறைந்த பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் ஒரு ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகாவை வெல்ல வைத்தார். சென்ற முறை மைத்திரியை நாங்கள் வெல்ல வைத்தோம். கடந்த முறை சிங்கள மக்கள் ஒன்றிணைந்து கொடுங்கோள் ஆட்சிக்காரனை ஆட்சி கதிரையில் அமர்த்தினார்கள். ஆனால் இன்று தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒற்றுமையாக, சந்தோஷமாக வாழவேண்டி பொருத்தமான ஒருவரை தேடுகின்றார்கள்.

எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தல் என்பது மிக முக்கியமானது. இதுதான் இந்த நாட்டினுடைய ஆட்சியை மாற்றப் போவது. இந்த நாட்டில் கம்யூனிஸ கட்சியாக ஜேவிபி உருவானது. 1989 ஆம் ஆண்டு இந்த நாட்டில் அப்பாவி சிங்களவர்கள் இவர்களின் செயலால் உயிரிழந்தார்கள். அந்த நேரம் இருந்த ஜேவிபி இப்போது தேசிய மக்கள் சக்தியாக மாறி இருக்கின்றது. இந்த நாட்டில் ரணிலுக்கு ஏன் வாக்களிக்க கூடாது என்றால் இந்த நாட்டில் அரகலயே இருந்த போது இந்த நாட்டை பொறுப்பெடுத்து பல வேலைகள் செய்தாலும் இதனை நெருக்கடிக்கு காரணமாக இருந்த அமைச்சர்களுடன் ரணில் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர். ரணில் விக்ரமசிங்க இவ்வளவு எம்.பிமாரையும் வைத்துக்கொண்டு ஜனாதிபதியாகலாம் என நம்பிக்கொண்டிருக்கின்றார்.- என்றார். (05)

# 2,046 லீற்றர் கோடா அழிப்பு





தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை திங்கட்கிழமை தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சுற்றிவலைப்பை மேற்கொண்ட பொழுது கசிப்பு உற்பத்தியில் மேற்கொண்ட சந்தேக நபர் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன் அதனை அடுத்து அப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட கோடா 2040 லீற்றரையும் பொலிஸார் அப்பகுதியில் அழித்துள்ளனர்.

அத்துடன் இச்சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் மேற்கொண்டுள்ளதாக தர்மபுரி பொறுப்பு அதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.

(05 - 113)

# நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் ஹின்ஸான் தங்கம்வென்று சாதனை



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024எ இல் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை நிந்தவூர் நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் எம்.எச். முஹம்மது ஹின்ஸான் 12 வயது ஆண்கள் பிரிவில் 100மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் 01ஆம் இடம் பெற்று தங்கம் வென்றுள்ளார்.

பாடசாலையின் அதிபர் ஏ. அப்துல் கபூர், வெற்றி பெற்ற மாணவனை வாழ்த்துவதோடு, இதற்காக உழைத்த அனைத்து விளையாட்டு பொறுப்பாசிரியர்களுக்கும் இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பாக இருந்து ஒருங்கிணைக்கும் உதவி அதிபர்கள், மாணவனின் பெற்றோர்கள் உட்பட்ட கல்வி சார் மற்றும் சாரா சமூகத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.

(05)



# லயங்களை கிராமமாகும் திட்டம் குறித்து எதிர்க்கட்சிகளுக்கு புரிதல் இல்லையாம்

## இதுவே சிறந்த தீர்வு என்கிறார் செந்தில் தொண்டமான்

(ஹஸ்பர் ஏ.எச்)

லயங்களை சுற்றியுள்ள 10ஏக்கர் காணியை பெற்று கிராமங்களாக மாற்றுவதே நாம் காணி உரிமையாளர்களாக மாற சிறந்த தீர்மானமாக இருக்க முடியும். இதனையே செய்ய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கூறியுள்ளதாக இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தலையில் இடம்பெற்ற ஜனாதிபதியை ஆதரிக்கும் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே செந்தில் தொண்டமான் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

உங்கள் அனைவருக்கும் தெரியும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி என்பது உறுதியான விடயம். அவரின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில் எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற போகிறார் என்பதற்காகவே நாம் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மலையக மக்களுக்கு புதிய நபர் அல்லர். கடந்த காலத்தில் மலையக மக்களுக்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்விற்கு அளிக்கின்ற ஆதரவில் மாற்றம் வருமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. எமது முடிவில் எந்த மாற்றங்களும் இல்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு முறை முடிவு செய்துவிட்டால் அந்த முடிவில் மீண்டும் மாற்றம் இருக்காது. அதுதான் இஇதொகா.

ஜனாதிபதிக்கு எப்போது ஆதரவு என இ.தொ.கா. அறிவித்தது அன்றுமுதல் ஜனாதிபதியின் வெற்றிக்காக பாடுபட்டு வருகிறது. ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகளை முன்வந்துள்ளோம்.

அதில் முக்கிய கோரிக்கையாக லயன் அறைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்திருக்கிறோம். 1980களின் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் நாடாளுமன்றத்துக்கு முதல் முறையாக சென்றபோது மலையகத்தில் ஒரு தனி வீடு கிடையாது.




ஒவ்வொரு வருடமும் 10000 வீடுகள் மலையகத்தில் கட்டப்படும் என அமைச்சரவை பத்திரமொன்றை மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் நிறைவேற்றி, 2015ஆண்டு ஆறுமுகன் தொண்டமான் ஐயா மறையும் வரை 36ஆயிரம் தனிவீடுகள் மலையகத்தில் கட்டப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டின் பின் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தில் 4ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 44 வருடங்களில் மொத்தம் 40ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மொத்தம் 2 லட்சம் வீடுகள் மலையகத்தில் தேவையாக உள்ளன.

இ.தொ.கா. பொய் வாக்குறுதிகளை அளிக்காது. இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள 10 ஆயிரம் வீடுகள் மற்றும் அடுத்த 5 வருடத்தில் 5 ஐயாயிரம் வீடுகள் கட்டப்படுமானால் மொத்தம் 15ஆயிரம் வீடுகள்தான் இருக்கும்.

15 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டால் இன்னும் ஒரு லட்சத்து 85 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டும். ஐந்து தலைமுறைகளாக 200 வருடங்களாக வாழும் வாழும் வீட்டில் ஓர் ஆணி அடிக்க வேண்டும் என்றாலும் தோட்ட நிர்வாகத்திடம் செல்ல வேண்டியுள்ளது. அதனால் நாம் வாழும் வீட்டை உடைத்து கட்ட எவரிடமும் சென்று அனுமதி கோரத் தேவையில்லை.

வாக்காளர் அட்டையுள்ள அனைவருக்கும் வீட்டு உரிமையை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம். இது எமது உரிமை. இனி எவரிடமும் அனுமதி கோரத் தேவையில்லை. வீட்டு திட்டங்கள் வரும்போது எங்காவது ஒரு மலையில் கொடுத்துவிடுகின்றனர். அதற்கு உட்கட்டுமானங்களை செய்ய பாரிய நிதி தேவைப்படுகிறது.

அதன் காரணமாகவே லயத்தை சுற்றியுள்ள 10 ஏக்கர் காணியை எமது மக்களுக்கு வழங்குங்கள் 25 வீடுகள் கட்ட வேண்டிய இடத்தில் 50 வீடுகளை கட்ட முடியும் என ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம். அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதனை ஜனாதிபதிக்கு புரிய வைக்கிறதா அல்லது எதிர்க்கட்சியினருக்கு விளக்கப்படுத்துவதா? லயன்களை சுற்றி 10ஏக்கர் காணியை பெற்று கிராமங்களாக்கி வீடுகளை உருவாக்குவது சாதகமான விடயமாகும்.

மேலும், நாட்டில் பொருளாதார நெருக்கடியும் வரிசை யுகமும் வந்தால் எந்த ஜனாதிபதியும் வரிசைகளில் நிற்கப்போதில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் எந்த வரிசைகளும் உருவாக அவர் இடமளிக்கவில்லை. அதனை நடைமுறையிலும் அவர் காட்டியிருக்கிறார். எனவே போலி வாக்குறுதி வழங்குவோரை நம்புவதில் அர்த்தமில்லை. - என்றார்.(05)

# ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகம் சாய்ந்தமருதில் ஞாயிறன்று திறப்பு

(நூருல் ஹுதா உமர்)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் சாய்ந்தமருது காரியாலய திறப்பு விழாவும் மக்கள் சந்திப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சி சபை வேட்பாளரும் ,அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினருமான எம்.எம்.எம்.பாமி தலைமையில் சாய்ந்தமருது காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, கட்சியின் பொருளாளரும் உயர் பீட உறுப்பினருமான ரஹ்மத் மன்சூர், கட்சியின் உயர்பீட உறுப்பினரும், சாய்ந்தமருது அமைப்பாளருமான எம்.ஐ. பிர்தௌஸ், அம்பாறை மாவட்ட செயற்குழு செயலாளரும், உயர் பீட உறுப்பினருமான ஏ.சி சமால்டீன், கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதி மேயர் ஏ.ஏ. வசீர் ,மாளிகைக்காடு அமைப்பாளர் எம்.எச்.எம்.இஸ்மாயில், இளைஞர் அமைப்பின் செயலாளர் முஹம்மட் ஹபீஸ், சாய்ந்தமருது மத்திய குழு உறுப்பினர்கள், கல்விமான்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## அரியவகை உயிரினமான நன்னீர் நாய் வழிதவறி வந்த உயிரினம் கண்டுபிடிப்பு



(பாறுக் ஷிஹான்)

நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் ஒன்று கடந்த சனிக்கிழமைபிடிபட்டு பின்னர் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரில் உள்ள தனியார் வாகன திருத்தும் இடத்திற்கு வழி தவறி சென்ற நிலையில் பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட நன்னீர் நாய் என மதிக்கத்தக்க உயிரினம் நீர்நாய் வகையைச் சேர்ந்தது ஆகும். இது தோற்றத்தில் பெரிய உடலைக்கொண்டிருக்கிறது. இது பொதுவாக லெட்றொகலே இனத்தின் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது இந்திய துணைக்கண்டத்திலும் மேலும் தென்கிழக்காசியப்பகுதியில் அமைந்துள்ள நாடுகளிலும் காணப்படுகிறது. மற்ற நீர் நாய்களைவிட இதன் மேல் உள்ள முடிகள் குறைவாகவும் மிருதுவாகவும் காணப்படுகிறது. இவை ஆற்றில் நீந்தி மீன்களை பிடிக்க ஏதுவாக இவற்றின் கால்களில் வாத்துக்களுக்குப்போல விரலிடைத் தோல் உண்டு. இவற்றின் பட்டையான நீண்ட வாலானது துடுப்புபோல நீந்தப் பயன்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## கல்முனை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராகக் கடமையேற்பு





(அபு அலா)

கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் திருமதி பிரதீபா பார்த்தீபன் தனது கடமையை திங்கட்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்திய சாலைகளில் கடமையாற்றி வந்த சிரேஷ்ட தரம் 1 இல் உள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நேர்முகத்தேர்வு அன்மையில் கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் நடாத்தப்பட்டது. அத்தேர்வில் வைத்தியர் திருமதி பிரதீபா பார்த்தீபன் சித்தியடைந்து கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக நியமனம் பெற்று திங்கட்கிழமை அவர் தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## கண்ணகி முதியோர் சங்கம் புனரமைப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கண்ணகி முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு அப்பிரிவின் கிராம உத்தியோகத்தர் எஸ்.கஜேந்திரன் முதியோர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ் .மதிசுதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டதோடு, சங்கத்தினர் சங்க உறுப்பின ஒருவருக்கு வைத்திய தேவைக்கான ஒரு தொகை பணமும் வழங்கி வைக்கப்பட்டது.

தலைவராக த.சிவானந்தராஜா( முன்னாள் இபோச உத்தியோகத்தர் ஊடகவியலாளர்), செயலாளராக இ.நடேசபிள்ளை( ஆடை வடிவமைப்பாளர்), பொருளாளராக த. வசந்தாதேவி மற்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.(05)





முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# கிளிநொச்சியில் நேற்று ரணில் ஆதரவுக் கூட்டம்

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கிளிநொச்சியில் நேற்று பரப்புரைக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, உங்களது தேவைகளை விடவும் தேர்தலை நடத்தவும், தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கவும் தான் சந்தர்ப்பங்களை எதிர்க்கட்சியினர் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அதற்கு நான் இடமளிக்க வில்லை என்று தெரிவித்தார்.

நீங்கள் நெருக்கடிகளைச் சந்தித்து துக்கமடைந்திருந்த தருணத்தில் அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான் பொறுப்பேற்று அடிப்படையான நெருக்கடிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தபோது அவர்கள் தேர்தலையே கோரினார்கள். விவசாயத்தக்கான உரம் உள்ளிட்ட அடிப்படையான விடயங்களை வழங்கவேண்டும் என்பதே எனது இலக்காக இருந்தது. நீங்களும் உரம் கேட்டீர்கள். மருந்துகளைக் கேட்டீர்கள். நான் அவற்றை வழங்குதற்கு நடவடிக்கைகளை எடுத்தேன். எதிர்க்கட்சிகளோ தேர்தலை கேட்டார்கள். தேர்தலை நடத்தினால் இந்தப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வினைக் காண்பது? உங்களது தேவைகளை விடவும் தேர்தலை நடத்தவும், தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கவும் தான் சந்தர்ப்பங்களை எதிர்க்கட்சியினர் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அதற்கு நான் இடமளிக்கவில்லை.

ரூபாவின் பெறுமதியை வலுப்படுத்தினேன். பொருட்களின் விலைகளை 30 சதவீதத்தினால் குறைத்தேன். நிவாரணங்களை வழங்கினேன். இன்னமும் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றுக்கான நிரந்தரமான தீர்வினைக் காண வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தினை நீங்கள்தான் எனக்கு வழங்க வேண்டும் - என்றார்.

## ஆதரவுக்குத் தார்மீகப் பொறுப்பினை ஏற்று மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவோம்

காஸ் சிலிண்டர் சின்னத்திற்கு மக்கள் வழங்குகின்ற வாக்குகளுக்கான தார்மீகப் பொறுப்பினை ஏற்று மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி வைப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கிளிநொச்சி நகரில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கருத்து உரையாற்றும் போதே ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஈ.பி.டி.பி. கட்சியின் அழைப்பினை ஏற்று, அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமான என் மீது நம்பிக்கை வைத்து ஆயிரக்கணக்கில் திரண்டு வந்திருக்கிற கிளிநொச்சி மக்களுக்கிய உங்களுக்கு நன்றியை தெரிவத்துக் கொள்கின்றேன். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எங்களின் கோரிகையை ஏற்று ரணில் விக்கிரமசிங்கவின் காஸ் சிலிண்டர் சின்னத்திற்கு வாக்களித்து அவரை வெற்றியடையச் செய்ய வேண்டும். அவர் வெற்றியடைந்ததும், அவருக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புக்களும் நிறைவேற்றப்படும் என்ற உறுதிமொழியை வழங்குகின்றேன் என்றார்.

# பிரிட்டன் குழந்தைகள்

ஆனால், குழந்தைகள் வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பொதுஇடங்களிலும் புறக்கணிக்கப்படுவது அல்லது ஒதுக்கப்படுவது, மோசமாக நடத்தப்படுவது ஆகியவற்றையும் ஆய்வுகளில் சேர்த்து ஒருங்கிணைந்த ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று அரசுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களுடைய குடும்ப அரவணைப்பு, நண்பர்களின் ஆதரவு, உருவத் தோற்றம் குறித்த சுயமதிப்பீடு, பள்ளிக்கூடத்தின் தன்மை, பள்ளிக்கூடத்தில் தரப்படும் வீட்டுப்பாட வேலைகள் என்று ஒவ்வொன்றாக யோசித்து, திருப்தி இருந்தால் அதிகபட்சம் 7 மதிப்பெண்களும் குறைவாக இருந்தால் பூஜ்யம் அல்லது ஒன்று முதல் ஏழு வரை ஏதாவதொரு எண்ணும் தருமாறு மாணவர்களிடம் கூறப்பட்ட பிறகே ஆய்வு நடத்தப்பட்டது.

### பரிந்துரைகள்

பிரிட்டனின் குழந்தைகள் மகிழ்ச்சியாக இல்லை என்று அறிக்கை தெரிவித்த உடனேயே அதை நடத்திய அறக்கட்டளை அரசுக்குச் சில பரிந்துரைகளையும் கூறியிருக்கிறது.

தேசிய அளவில் குழந்தைகளின் நலனுக்காக புதிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் உடல்நல - மனநல நிபுணரை அரசு அனுப்பிவைக்க வேண்டும். தேசிய சுகாதார திட்டத்தில் இதைச் சேர்ப்பதாக பிரதமர் கீர் ஸ்டார்மர் உறுதியளித்திருக்கிறார்.

பெண் குழந்தைகளுக்கு ஏன் அதிகக் கவலை என்று மேலும் அதிகமாக தகவல்களைப் பெற்று உரிய பரிகார நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றால் அரசின் மானிய உதவிகள் கிடையாது என்ற திட்டத்தை அரசு கைவிட வேண்டும். எத்தனை குழந்தைகள் இருந்தாலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசின் உதவிகள் வழங்கப்பட வேண்டும். அரசின் இந்தக் கட்டுப்பாட்டால் மூன்றாவது, நான்காவது என்று பிறந்த குழந்தைகள் கிட்டத்தட்ட 16 லட்சம் பேர் பாதிப்படைந்துள்ளனர்.

பள்ளிக்கூட சூழல்கள் மேம்படுத்தப்பட வேண்டும். வலுத்த மாணவன் இளைத்த மாணவனை மிரட்டுவது, அடிப்பது, அவமானப்படுத்துவது போன்றவை தடுக்கப்பட வேண்டும்.

குழந்தைகள் இணைந்து விளையாடவும் சேர்ந்து சமூக, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் அதிக வாய்ப்புகள் தரப்பட வேண்டும்.

பெற்றோர், ஆசிரியர் தவிர பள்ளிக்கூட குழந்தைகள் நம்பிக்கையோடு பழக மூன்றாவது தரப்பினரும் அவசியம் என்கிறார் ரஸ்ஸல்.

பல குழந்தைகளுக்கு, பெற்றோர் வேலைக்குப் போவதாலும் ஆசிரியர்களுக்கு நேரம் இல்லாமல் போவதாலும் மூன்றாவது தரப்பு நபர்களை அணுக அச்சமாக இருக்கிறது. இதனால் அவர்கள் மொபைல் போனில் சமூக ஊடகங்களில் அதிகம் மூழ்குகின்றனர். இது அவர்களுக்கு மனமகிழ்ச்சியை அளிப்பதற்குப் பதிலாக அவர்களுடைய ஆளுமையை குறைத்து மதிப்பிடவைத்து, சோகத்தில் தள்ளுகிறது என்று சுட்டிக்காட்டுகிறார் ரஸ்ஸல்.

குழந்தைகளின் குறைகளைக் கேட்கவும் அவர்களுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறி உற்சாகமூட்டவும் அரசு அதிக முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்கிறார்.

அல் ஜஸீரா

# சம்பள உயர்வுக்கு அமைச்சரவை அனுமதி இல்லை என்பது பொய்

## அரச தரப்பிலிருந்து விளக்கம்

2025 ஆம் ஆண்டு அமுல்படுத்தப படவுள்ள சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை என வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப்புறம்பானவை என்பதோடு அதற்கான அனுமதி ஏற்கனவே கிடைத்துள்ளது என்று அரச சேவையின் அனைத்து பிரிவுகளினதும் சம்பளம், ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் உதய ஆர்.செனிவிரத்ன தெரிவித்தார்.

2024 மே மாதம் 27 திகதியிட்ட எண் 24%பல்வகை (020) என்ற அமைச்சரவை தீர்மானத்தின்படி, அரச சேவையில் உள்ள பல்வேறு சேவைக் குழுக்களுக்கு இடையே உள்ள சம்பள முரண்பாடுகளை ஆய்வு செய்து, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் உள்ளடக்கத்தேவையான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய வகையில், அரச சேவையின் அனைத்துப் பிரிவுகளினதும் சம்பளம், ஊதியம்மற்றும்ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை வழங்க ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்த நிபுணர் குழுவானது அரச துறையின் 81 பிரதான தொழிற் சங்கங்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி, உரிய தகவல்களை ஆய்வு செய்து இடைக்கால அறிக்கையை தயாரித்துள்ளது.

இது தொடர்பாக குழுவின் தலைவர் உதய ஆர். செனவிரத்ன செய்தியாளர்களிடம் தெளிவுபடுத்தும்போது தெரிவித்ததாவது:

இந்த அறிக்கை தயாரிப்பில் மேலும் பல தொழிற் சங்கங்கள், பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் சுமார் 391 தனிநபர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளும் ஆய்வு செய்யப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன என்று தெரிவித்தார்.

தற்போதுள்ள அரச நிதி வாய்ப்புகள் மற்றும் அரச துறை ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கருத்தில் கொண்டு, அரசசெலவை முகாமைத்துவம் செய்வதற்கான முன்மொழிவுகளுடன், ஏற்கனவே உள்ள ஊதிய கட்டமைப்புகளை திருத்துவதற்கான அளவுகோள்கள் மற்றும் தரநிலைகள் அத்துடன் அரச செலவுகளை குறைத்தல் மற்றும் வருமானம் ஈட்டும் மூலோபாயங்களை உள்ளடக்கிய கொள்கை ரீதியிலான கட்டமைப்பை இந்த இடைக்கால அறிக்கை, பரிந்துரைக்கிறது

அதன்படி, அமைச்சரவைப் பத்திரம் எண் 24%1609%601%097, ஆன 'அரச சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகளைக் கையாள்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை' நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் 12-08-2024 ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கையை , அமைச்சரவை பரிசீலித்து கலந்துரையாடிய பின்னர், அந்த இடைக்கால அறிக்கையின் பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள (3.1) முதல் (3.18) வரையிலான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான அங்கீகாரம் அளித்தல் மற்றும் மேற்படி இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் உட்படுத்தி நடைமுறைப்படுத்தும் வகையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி அனைத்து அரச ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை திருத்தத்திற்கு உட்படும் வகையில்) ரூ.25,000- மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை வழங்கல், அரச சேவையில் குறைந்தபட்ச ஆரம்ப மாதாந்தச் சம்பளம் 24மூ முதல் 50% 60% வரையில் அதிகரிப்பதோடு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்த சம்பளம் ஷரூ. 55,000 ஆக மாற்றி அதற்கேற்ப ஏனைய அனைத்து பதவிகளுக்குமான அடிப்படை சம்பளத்தை மாற்றியமைத்தல், வர்த்தக அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தவிர அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இந்த புதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு முறையை நடைமுறைப்படுத்துதல்,

2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளுக்கு அவர்களுக்கு உரிய சம்பள அதிகரிப்புகளை வழங்கி அவர்களின் ஓய்வூதியங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான முரண்பாடுகளைத் தீர்த்தல்,

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, கடமையில் உள்ள அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் 50மூக்கு சம்மாகும் வகையில் ஜனவரி 2025 முதல் வழங்குதல்,

தற்போதுள்ள வரிக் கொள்கைகளுக்குள் இந்தச் செலவுகளை நிர்வகிப்பதற்கு உட்பட்டு, இந்த சம்பள முறை மற்றும் முன்மொழியப்பட்ட சம்பள முறை 2025 ஜனவரி 01 முதல் நிதி வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு படிநிலையாக செயல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்படி நிபுணர் குழு தமது இறுதி அறிக்கையை 03.09.2024 அன்று ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதுடன், குறித்த அறிக்கையின் 01 முதல் 08 வரையான பரிந்துரைகளால் முன்வைக்கப்பட்டுள்ள அரச சேவைகளின் வகைப்பாடு, அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள், ஓய்வூதிய வேறுபாடுகளை நீக்குதல், விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் மற்றும் அக்ரஹார செலுத்தல்கள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் திருத்தங்கள் 01.01.2025 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான அங்கீகாரத்தை வழங்குதல், அந்த பரிந்துரைகள் 2025 வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்வாறான உணர்வு பூர்வமான விடயங்களை வெளியிடும்போது மக்களை தவறாக வழிநடத்தும் பொய்யான செய்திகளை வெளியிடாமல் உண்மைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை மக்கள் மயப்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

# அரசியல் கட்சிகள் எப் பக்கம் இருந்தாலும் தமிழ், முஸ்லிம் மக்கள் ரணில் பக்கமே

## அகிலவிராஜ் தெரிவிப்பு

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எந்த பக்கம் இருந்தாலும் அந்த மக்கள் ரணில் விக்ரமசிங்கவுடனே இருக்கின்றனர் என்று ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் அகிலவிலாஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

இடம்பெற இருக்கும் தேர்தலில் அநுரகுமார திஸ ாநாயக்கவை சஜித் பிரேமதாசவுக்கு முந்த முடியாது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்ததன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த தேர்தலில் பின்னடைவை அடைந்துள்ளதை ஏற்றுக்கொண்டுள்ளார் என்று சிலர் பரப்புரை செய்து வருகின்றனர்.

ரணில் விக்ரமசிங்க இந்த தேர்தலில் கீழ் மட்டத்தில் இருந்தே தற்போது முன்னிலைக்கு வந்துள்ளார். ஆனால் சஜித் பிரேமதாச கடந்த பொதுத் தேர்தலில் 27இ லட்சம் வாக்குளை பெற்று எதிர்கட்சி தலைவராக இருந்து வருகிறார். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி என்பது மாற்று ஆட்சியாகும். அதனால் இந்தத் தேர்தலில் ஆளும்தரப்புக்குச் சவாலாக இருக்கவேண்டியது எதிர்க்கட்சியாகும்.

என்றாலும் கடந்த பொதுத்தேர்தலில் 3 வீத வாக்குகளைப்பெற்ற அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சஜித் பிரேமதாசவைவிட முன்னிலையில் இருப்பதாகவே தெரிவிக்கப்படுகிறது. அதற்கு எதிர்க்கட்சியின் பலவீனமே காரணமாகும். இதனையே ரணில் விக்ரமசிங்க தெரி வித்திருந்தார்.

ரணில் விக்ரமசிங்க தமிழ் முஸ்லிம் மக்களுக்கு செய்த சேவைகள் அந்த மக்களுக்கு தெரியும். அதனால் இந்த தேர்தலில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எந்த பக்கம் இருந்தாலும் அந்த மக்கள் ரணில் விக்ரமசிங்கவுடனே இருக்கின்றனர். அவர்கள் ரணில் விக்ரமசிங்கவை தவிர வேறு யாருக்கு வாக்களிக்க தீர்மானித்தாலும் அது அவர்களே அவர்களை நெருக்கடிக்குள் தள்ளிக்கொள்ளும் நிலையாகும். எனவே அவர்கள் அவ்வாறான தீர்மானத்துக்கு செல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதேநேரம் இந்த தேர்தலில் நாட்டு மக்கள் தவறான தீர்மானம் எடுத்தால் பின்னர் கைசேதப்பட வேண்டி வரும் - என்றார்.

### புலித்தோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சொத்துக்களை அதிகளவில் அழித்திருக்கிறது. ஜேவிபிக்கு இருப்பது பயங்கரவாத வரலாறு என்பதை மக்கள் மறக்கக்கூடாது. இப்போது நாட்டில் நல்ல தலைவர் இருக்கிறார், அவரிடம் நாட்டின் அபிவிருத்திக்கான நல்ல திட்டம் உள்ளது. எனவே மக்களும் சரியான தலைமைத்துவத்தை தெரிவு செய்ய முன்வர வேண்டும் - என்றார்.

### அவர்கள் அச்சப்படு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாத்தளையில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

செப்டெம்பர் 22 அவர்கள் எமது வெற்றியை உத்தியோக பூர்வமாக அறிவிப்பார்கள். அதில் எந்தச் சந்தேகமும்வேண்டாம். எமது வெற்றியை எண்ணி சிலர் கவலைப்படுகின்றார்கள்.

மத்திய வங்கி மோசடியுடன் தொடர்புபட்டவர்கள் எமது வெற்றியை எண்ணி கவலைப்படுவார்கள். கலாசார நிதியிலிருந்து பெருந்தொகையை அபகரித்தவர்கள் கவலைப்படவேண்டும். வீடமைப்பு நிதியில் பணத்தை வீண் விரயம் செய்தவர்கள் கவலைப்படவேண்டும்.

அலோசியஸின் பணத்தைப் பெற்றவர்கள் பதற்றமடைய வேண்டும். வரிகட்டாதவர்கள் பதற்றமடையவேண்டும். மக்கள் வங்கியில் கோடிக்கணக்கான பணத்தைப் பெற்று அதனை கடனாக கழிப்பதற்கு முயலும் தயாகமகே போன்றவர்கள் பதற்றமடைய வேண்டும். ஆனால் எந்தவொரு பொதுமகனும் பதற்றமடைய வேண்டியதில்லை. ஏனென்றால் தேசிய மக்கள் சக்தியின் படை தான் அமைதியான ஆளும்தரப்பு என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

தம்மிடம் சிறந்த அணியிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். இவர்கள் யார்? மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித்த அபய குணவர்த்தன. பிரசன்ன ரணதுங்க, லொஹான் ரத்வத்தே. இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை என்னை விடவும் உங்களுக்கே நன்றாகத் தெரியும் என்றார்.

# சாதாரண தர பரீட்சை பெறுபேறு விரைவில்

2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை விரைவாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இம்முறை சாதாரண தர பரீட்சையில் 387,648 பாடசாலை பரீட்சார்த்திகளும் 65,331 தனியார் பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தன

# இழப்புகளை நெஞ்சில் நிறுத்தி சங்கு சின்னத்திற்கு புள்ளடி போட்டு ஒற்றுமையை வெளிப்படுத்துவோம்

## அனந்தி சசிதரன் கோரிக்கை

தமிழின விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களது தியாகத்தையும், போரின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் இழப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி செப்ரெம்பர் 21 ஆம் திகதி தமிழ்ப் பொது வேட்பாளரின் சங்கு சின்னத்துக்கு வாக்களிப்போம் என முன்னாள் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பரப்புரை நடவடிக்கை அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றும் போது அனந்தி சசிதரன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

எனது கணவர் எழிலனை இராணுவத்திடம் நேரடியாக கையளித்து இன்று 15 ஆண்டுகளாகியும் நீதி கிடைக்கவில்லை. சர்வதேச அளவில் நீதிகேட்டு போராடிக்கொண்டிருக்கிறேன். கடந்த தேர்தல்களில் மாறி மாறி சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்தோம். ஆனால் எவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணவில்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இரண்டு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்தார். இம்முறை தமிழ் மக்கள் சார்பில் கூட்டாக பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் கொண்டுவரப்பட்டுள்ளார். தமிழர்களுடைய வாக்கு தமிழருக்கே என்ற அடிப்படையில் நாங்கள் அவருக்கு வாக்களிக்க வேண்டும்.

தமக்காக வாழாது எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் உயிர்நீத்த பல்லாயிரம் மாவீரகளது தியாகத்தையும், போரின்போது கொல்லப்பட்ட மக்களது இழப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி தமிழர்களின் உரிமைச் சின்னமான சங்கு சின்னத்திற்கு நேராக ஒரே ஒரு புள்ளடியை போட்டு தமிழர்களின் ஒற்றுமையை எடுத்துக்காட்ட வேண்டும். - என்றார். (05)

# பணிப்பெண் என்ற போர்வையில் கொழும்பு வீடுகளில் திருட்டுக்கள்

## சந்தேகநபர் போதைப்பொருளுடன் கைது

பணிப்பெண் என்ற போர்வையில் பல்வேறு பிரதேசங்களில் உள்ள வீடுகளில் இருந்து நகைகள் மற்றும் சொத்துக்களை திருடியதாக கூறப்படும் பெண் ஒருவர் போதைப்பொருளுடன் கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் இரத்மலானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தெஹிவளை, ஹொரணை மற்றும் மிரிஹான உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு பணிப்பெண்ணாக சென்று அந்த வீடுகளில் உள்ள நகைகள் மற்றும் சொத்துக்களை திருடுவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 20 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 02 தங்க வளையல்கள், 02 தங்க மாலைகள் மற்றும் பென்டென் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது


முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் மரக்குற்றிகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 40 வயது மதிக்கத்தக்க சிவநகர் பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் உள்ள வீடொன்றில் மரக்குற்றிகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, மறைத்து வைத்திருந்த மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியதுடன், கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளின் பெறுமதி ஒரு லட்சம் ஷரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வீட்டின் உரிமையாளர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஓட்டோலிருந்து சிசுவின் சடலம் அக்கரப்பத்தனை பகுதியில் மீட்பு



அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட என்போல்ட் தோட்டப்பிரிவில் ஓட்டோ ஒன்றில் இருந்து சிசுவொன்றின் சடலமொன்று திங்கட்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவில் துர்நாற்றம் வீசியதால் தோட்ட மக்கள் ஓட்டோவினுள் சென்று பார்த்த போது கறுப்புநிற பொலித்தீன் உறையில் போடப்பட்டு சிவப்பு நிறத் துணியொன்றில் சுற்றி மறைக்கப்பட்ட நிலையில் இருந்த சிசுவின் சடலத்தை கண்டு அக்கரப்பத்தனை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

எனினும் சிசுவின் தாய் தொடர்பிலும், மேற்படி சிசுவின் சடலத்தை அவ்விடத்திற்கு கொண்டு வந்து விட்டுச் சென்றவர் தொடர்பிலும் இதுவரை எவ்வித தகவல்களும் தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் 28 வயதுடைய ஓட்டோச் சாரதி சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் பார்வையிட்டதன் பின்னர் விசாரணைகள் மேற்கொண்டு சிசுவின் சடலம் செவ்வாய்க்கிழமை நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பில் அக்கரப்பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# செங்கடகலயில் தேர்தல் மோசடி

## பொலிஸார் விசாரணை

*தபால் மூல வாக்களிப்பின் போது கட்டுகஸ்தோட்டை பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பல பொலிஸ் உத்தியோகத்தர்களை திசைகாட்டிக்கு வாக்களிக்குமாறு அச்சுறுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*மேற்குறித்த சம்பவம் தொடர்பில் ஐக்கிய மக்களின் கூட்டணியின் நடவடிக்கைகளின் பிரதானி சட்டத்தரணி திலின பெர்னாண்டோவால் தேர்தல் ஆணையாளர் மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்) ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், வாக்குப்பதிவில் செல்வாக்கு செலுத்துவது தேர்தல் விதிகளை மீறும் செயலாகும் என்பதால், சம்பந்தப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த முறைப்பாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பல பொலிஸ் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த வாக்குமூலங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் பொலிஸ் சார்ஜன்ட் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கண்டி பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (05)*

# பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

## மருந்தக உரிமையாளர் கைது

மொனராகலை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மொனராகலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை செய்யும் மருந்தகம் ஒன்றை நடத்திச் சென்ற சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கண்டி பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மருந்தகத்திலிருந்து சுமார் இரண்டு இலட்சம் ஷரூபா மதிப்புள்ள போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் செவ்வாய்கிழமை மொனராகலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் 3 பேர் வைப்புப் பணம் செலுத்தினர்

*எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை (ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி வரை) 03 பேர் வைப்புப் பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான வைப்புப் பணத்தை செலுத்துவதற்கான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*


*அதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடுவதற்கு சாகர காரியவசமும், சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதற்கு சுசிறி குணசுந்தர கஹவேவிதானவும், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுவதற்கு ரத்ன கமகே ஆகியோர் வைப்புப்பணம் செலுத்தியுள்ளனர்.(05)*

# மசாஜ் நிலையத்தினுள் வாளுடன் புகுந்த 6 பேர் இரு பெண்கள் மீது பாலியல் துஸ்பிரயோகம்

பாலும்மஹர பிரதேசத்தில் உள்ள மசாஜ் நிலையமொன்றிற்குள் வாளுடன் நுழைந்த இனந்தெரியாத 6 பேர் அங்கிருந்த இரண்டு பெண்களை கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளதாக யக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

பாலும்மஹர பிரதேசத்தில் உள்ள மசாஜ் நிலையமொன்றிற்குள் வாளுடன் நுழைந்த இனந்தெரியாத 6 பேர் மசாஜ் நிலையத்தில் இருந்த ஐந்து பெண்களை அறையொன்றிற்குள் அடைத்து வைத்து அவர்களின்



கைத்தொலைபேசிகள் மற்றும் பணம் உள்ளிட்ட பொருள்களைக் கொள்ளையடித்துள்ளனர்.

பின்னர், சந்தேக நபர்கள் அங்கிருந்த இரண்டு பெண்களை கடத்திச் சென்று, அவர்களை கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா மாவட்டத்திற்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஜகத் ரோஹனவின் பணிப்புரையின் பிரகாரம், யக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலையின் 34ஆவது ஆண்டு







பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலையின் 34ஆவது ஆண்டு நினைவு தினம் திங்கட்கிழமை மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக சத்துருக்கொண்டான் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியருகே இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாக படுகொலை ஞாபகார்த்த தூபியானது புனரமைக்கப்பட்டு படுகொலைசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு ஜேசுசபை துறவி அருட்தந்தை ஜோசப் மேரியினால் திறந்துவைக்கப்பட்டது.

படுகொலைசெய்யப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். இதன்போது நினைவுத்தூபியில் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09ஆம் திகதி இராணுவத்தினருடன் இணைந்து ஊர்காவல் படையினரால் சத்துருக்கொண்டான், கொக்குவில், பிள்ளையாரடி கிராமங்களைச் சேர்ந்த கர்பிணித் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், அங்கவீனம் அடைந்தவர்கள் என பலர் கொண்டுசெல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இதில் 5 கைக்குழந்தைகள், 42 பத்து வயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 184 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த படுகொலை தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றபோதும் இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எந்தவித தண்டனைகளும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் மகஜர் ஒன்றும் வாசிக்கப்பட்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பும் வகையில் அருட்தந்தை க.ஜெகதாஸிடம் வழங்கப்பட்டது.

குறித்த நினைவுத்தூபியில் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அங்குவந்த பொலிஸார் நினைவுக்கல்லை உடைத்தெறிந்து அங்கு பணியிலீடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்திய நிலையில் திங்கட்கிழமை நினைவேந்தல் நடைபெற்றது.

(05)



## ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் வடக்கு ஆளுநரை சந்தித்து நேரில் பேச்சு

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான வடக்கு மாகாணத்தின் கள நிலைவரங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ்க்கும் இடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என ஆளுநர் இதன்போது கூறினார்.

அமைதியான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த ஆளுநர், மக்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினரிடம் தெளிவுபடுத்தினார்.(05)

## பெருந்தோட்ட தொழிலாளர் அடிப்படைச் சம்பளம் 1,350

### சம்பள நிர்ணய சபைக் கூட்டத்தில் முடிவு

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,350 ஷரூபாவை அடிப்படை சம்பளமாக மாத்திரம் வழங்க இன்றைய சம்பள நிர்ணய சபை கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஊக்குவிப்பு திறன் கொடுப்பனவாக 350 ஷரூபா வழங்கப்படமாட்டாது என்றும் மாறாக மேலதிகமாக எடுக்கப்படும் கொழுந்து கிலோ ஒன்றுக்கு 50 ஷரூபா வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

மேலும், மூன்று வருடங்களுக்கு சம்பள உயர்வு கோரப்பட மாட்டாது என்ற தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக இலங்கை செங்கொடி சங்கத்தின் செயலாளர் மேனகா துரைசிங்கம் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2024 வெளியிடப்பெற்றது